# காப்புறுதித் தயாரிப்பு தகவல் ஆவணம்
## மோட்டார் வாகன முழுமையான காப்புறுதி

***வழங்கப்படும் அடிப்படை காப்புறுதி வசதிகள்:***

***அ. வாகனத்திற்கான சொந்த தேசம்***

***காப்புறுதி பாதுகாப்பு:*** *காப்புறுதி செய்யப்பட்ட வாகனம் மற்றும் அதன் பாகங்களுக்கு ஏற்படும்* ***நட்டம்*** *அல்லது சேதத்தை, பின்வரும் சந்தர்ப்பங்களின் போது காப்புறுதி நிறுவனம் பொறுப்பேற்பார்:*

- *தற்செயலான வெளிப்புறக் காரணிகள்*
- *தீ, வெடிப்பு, தானாகப் பற்றிக்கொள்ளுதல், மின்னல், கொள்ளை, வீடு உடைத்தல் அல்லது திருட்டு*
- *தீங்கிழைக்கும் செயல்கள்*
- *வீதி, ரயில், உள்நாட்டு நீர்வழி, மின்தூக்கி (Lift) அல்லது உயர்த்தி மூலம் போக்குவரத்துச் செய்தல்.*

***விதிவிலக்குகள்:*** *டயர்கள், காற்றுப் பைகள் (Air bags), மின்கலங்கள் (Battery) மற்றும் மின் கூறுகளுக்கு ஏற்படும் சேதங்கள் (ஏனைய சேதங்கள் ஒரே நேரத்தில் ஏற்பட்டால் தவிர இவை ஈடுசெய்யப்படமாட்டாது). இதன் விளைவாக ஏற்படும் நட்டம், தேய்மானம், இயந்திர அல்லது மின் செயலிழப்புகளுக்கு காப்புறுதி வழங்கப்படமாட்டாது.*

***மேலதிக நன்மைகள்:*** *விபத்தின் போது அருகிலுள்ள பழுதுபார்ப்பவரிடம் கொண்டு செல்வதற்கும், வாகனத்தைப் பாதுகாப்பதற்கும் மற்றும் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கும் ஏற்படும் நியாயமான செலவுகள் (மோட்டார் சைக்கிள்களுக்கு ரூ. 500/- வரை மற்றும் ஏனைய வாகனங்களுக்கு ரூ. 1,000/- வரை).*

*(மேலும் விபரங்களுக்கு மோட்டார் ஒப்பந்த ஆவணத்தின் பக்கம் 1-4 இல் உள்ள பிரிவு I ஐப் பார்க்கவும்).*

***ஆ. மூன்றாம் தரப்பு பொறுப்பு***

| ***சேதம்*** | ***பொருந்தக்கூடிய அதிகபட்ச வரம்பு நிபந்தனைகள்*** |
|---|---|
| *தனிப்பட்ட காயம் அல்லது இறப்பு* | *வரம்பற்றது* |
| *சொத்து சேதம் - வணிக வாகனங்கள் & மோட்டார் சைக்கிள்கள்* | *ரூ. 15,000/-* |
| *சொத்து சேதம் - தனியார் கார்* -<br>மூன்றாம் தரப்பு காப்பீட்டிற்கான விரிவான காப்பீடு* | *ரூ. 10,000,000/-<br>ரூ. 100,000/-* |
| *சொத்து சேதம் – வீதி அனுமதிப்பத்திரம் உள்ள பேருந்துகள்* | *ரூ. 5,000,000/-* |

*(மேலதிக விபரங்களுக்கு மோட்டார் ஒப்பந்த ஆவணத்தின் பக்கம் 4-7 இல் உள்ள பிரிவு II ஐப் பார்க்கவும்).*

***இ. மருத்துவச் செலவுகளுக்கான காப்புறுதி: காப்புறுதி***

*செய்யப்பட்டவர் அல்லது பயணிகளுக்கு தற்செயலான உடல் காயம் காரணமாக ஏற்படும் மருத்துவச் செலவுகளுக்கு ரூ. 1,500/- வரை வழங்கப்படும் (ஊதியம் பெறும் ஓட்டுநர்கள்/துப்புரவாளர்கள் தவிர - தனியார் கார்களுக்கு மட்டும்).*

## ***மேலதிக காப்புறுதி ஒப்பந்தங்கள் (மேலதிக கட்டுப்பணம் செலுத்துவதன் மூலம் பெறலாம்):***

1. *இயற்கை பேரிடர் காப்புறுதி*
2. *தனிநபர் விபத்துச் சலுகை*
3. *தொழிலாளர் இழப்பீட்டுக் காப்புறுதி*
4. *லொரிகளுக்கான சரக்குக் காப்புறுதி*
5. *விசேட விண்ட்ஸ்கிரீன்/கண்ணாடிப் பாதுகாப்பு (Windscreen Cover)*
6. *நீட்டிக்கப்பட்ட இழுவைக் கட்டணங்கள் (Towing Charges)*
7. *நீட்டிக்கப்பட்ட மூன்றாம் தரப்புச் சொத்துச் சேதக் காப்புறுதி*
8. *சட்டப் பொறுப்புக் காப்புறுதி*
9. *அனுமதிப்பத்திரம் பெற்ற (Route Permit) பேருந்துகளுக்கு வரம்பற்ற மூன்றாம் தரப்பு காயம்/இறப்புக் காப்புறுதி*
10. *ஓட்டுநர்/ செலுத்துபவர் பயிற்சிக் காப்புறுதி*
11. *மேலதிக காற்றுப் பை (Air bag) பாதுகாப்பு*
12. *வாகனங்களை வாடகைக்கு விடுவதற்கான விசேட* **காப்புறுதி**
13. *வேலைநிறுத்தம், கலவரம் மற்றும் உள்நாட்டுக் குழப்பங்கள்*
14. *பயங்கரவாதப் பாதுகாப்பு*
15. *பின்னக்கிள் பாதுகாப்பு (உற்பத்தி ஆண்டு 8 ஆண்டுகளுக்குள், 7 மில்லியனை மீறும் தனியார் கார்கள் மற்றும் இரட்டை பயன்பாட்டு வாகனங்களுக்கு மட்டும்)*
16. *அதிக ஆபத்துள்ள சுமைகளுக்கான பாதுகாப்பு (டிப்பர்கள் போன்ற விசேட வகை வாகனங்களுக்கு)*
17. *மாற்றியமைக்கப்பட்ட வாகனங்களுக்கான பாதுகாப்பு (உற்பத்தியாளர் தரப்பிற்கு அப்பாற்பட்ட மாற்றங்கள்)*
18. *வரி இல்லாத பாகங்களுக்கான பாதுகாப்பு (மாற்று பாகங்களுக்கான உள்நாட்டு சுங்க வரி விலக்கு)*

***முக்கிய அம்சங்கள்:***

- ***காப்புறுதி காலாவதி:*** *காலாவதித் திகதியன்று நள்ளிரவு 12 மணி வரை* ***காப்புறுதி*** *அமுலில் இருக்கும்.*

## ***கட்டுப்பணம் செலுத்தும் முறை:***

- *ஒப்பந்த அட்டவணையில் வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், வருடாந்தக்* **கட்டுப்பணம்** *செலுத்துதல் அவசியமாகும்.*

## ***இதில் உள்ளடக்கப்படாதவை: (மேலதிக விபரங்களுக்கு ஒப்பந்த ஆவணத்தைப் பார்க்கவும்)***

1. *இலங்கைக்கு வெளியே ஏற்படும் விபத்துகள்,* **நட்டம்***, சேதம் அல்லது பொறுப்புகளுக்கு காப்புறுதி வழங்கப்படமாட்டாது.*
2. *எந்தவொரு ஒப்பந்தப் பொறுப்புகளிலிருந்தும் (Contractual liabilities) எழும் கோரிக்கைகள்.*
3. *வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால் இயற்கை பேரிடர்கள், வேலைநிறுத்தம், உள்நாட்டுக் கலவரம் மற்றும் பயங்கரவாதம்.*
4. *போர் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆபத்துகள்.*
5. *போதை தரும் மதுபானம் அல்லது போதைப்பொருட்களை உட்கொண்டு வாகனம் ஓட்டுதல்.*
6. *மோசடியான கோரிக்கைகள் (Fraudulent claims).*
7. *எந்தவொரு மோட்டார் கேரேஜ், பழுது பார்க்குநர், சேவை நிலையம் அல்லது அதற்கு ஒத்த நிறுவனத்தின் பாதுகாப்பில், கட்டுப்பாட்டில் அல்லது உடைமையில் இருக்கும் போது.*

*(மேலதிக விபரங்களுக்கு மோட்டார்* ***ஒப்பந்த*** *ஆவணத்தின் பக்கம் 8-12 இல் உள்ள 'பொதுவான விதிவிலக்குகள் மற்றும் நிபந்தனைகளை' பார்க்கவும்).*

### பொருந்தக்கூடிய மேலதிகக் கொடுப்பனவுகள் *(Excess)*

*ஒவ்வொரு கோரிக்கைக்கும் (Claim), கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்த நீங்கள் பொறுப்பாவீர்கள்:*

| | | |
|---|---|---|
| அ. | மோட்டார் சைக்கிள்கள்: | ரூ. 2,000/- மற்றும் ரூ. 4,000/- (ஏதேனும் ஒப்பந்த காலத்தின் பின்னர்). |
| ஆ. | அனைத்து பணியமர்த்தல் வாகனங்கள்: | ரூ. 1,000/- |
| இ. | அனைத்து வாடகை வாகனங்கள் (Rent-a-car): | ரூ. 5,000/- |
| ஈ. | அனைத்து வாடகை மோட்டார் சைக்கிள்கள்: | ரூ. 2,000/- |
| உ. | மோட்டார் ஹோம் (Motor Home): 10% அல்லது | ரூ. 10,000/- (இதில் எது அதிகமோ அது). |

*ஊ. வாகனத்தின் வயதிற்கேற்ப அறவிடப்படும் கட்டாய மேலதிகக் கட்டணம்:*
- *i. 10 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது: ரூ. 1,000/-*
- *ii. 15 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது: ரூ. 1,500/-*
- *iii. 20 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது: ரூ. 2,000/-*

*எ. வாகனத்தின் நிலை அல்லது பாதகமான கோரிக்கை வரலாறு காரணமாக விதிக்கப்படும் மேலதிகத் தொகை உரிமைகோரல்கள்*

*ஏ. தன்னார்வ மிகை*

### காப்புறுதியை இரத்து செய்தல்:

*ஒப்பந்தத்தை காப்புறுதி செய்தவர் அல்லது காப்புறுதி நிறுவனத்தினர் முடித்துக்கொள்ளலாம். அவ்வாறு இரத்துச் செய்யும்போது ஒப்பந்த விதிமுறைகளின்படி எஞ்சிய பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும். (மேலதிக விபரங்களுக்கு மோட்டார் ஒப்பந்த ஆவணத்தின் பக்கம் 11 இல் உள்ள நிபந்தனை 6 ஐப் பார்க்கவும்).*

### கோரிக்கை நடைமுறை மற்றும் தேவையான ஆவணங்கள்:

- ***வாகனச் சேதம்:*** *விபத்து குறித்து* ***காப்புறுதி*** *நிறுவனத்திற்கும் அருகிலுள்ள காவல் நிலையத்திற்கும் உடனடியாகத் தெரிவிக்கப்படவெண்டும். இந்த அறிவிப்பைத் தொலைபேசி அழைப்பின் மூலமும் வழங்கலாம். விபத்து தொடர்பான காவல் நிவைய அறிக்கை, வாகனப் பழுதுபார்ப்பு மதிப்பீடு (Estimate)*
- *பழுதுபார்ப்புக் கட்டணப் பட்டியல்கள் (Bills), மீட்கப்பட்ட பாகங்கள் அல்லது காப்புறுதி நிறுவனம் கோரும் வேறு ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.*
- ***மூன்றாம் தரப்பு உரிமை கோரல்கள் பழுது பார்க்கும் நிலையம் உரிமை:*** *கோரிக்கை விடுக்கப்படும் போது, பின்வரும் ஆவணங்களுடன் உங்களின் பூரணத்துழைப்பும் அவசியமாகும்: ஓட்டுநரின் காவல் நிவைய அறிக்கை, ஓட்டுநர் உரிமம் சாரதி அனுமதி பத்திரம் (Driving License), வாகனப் பதிவுச் சான்றிதழ் மற்றும் ஒப்புதல் கடிதம்.தேவைக்கேற்ப மேலதிகமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

  - ***மூன்றாம் தரப்பினர் இறப்பு:*** *மரணச் சான்றிதழ், பிரேத பரிசோதனை அறிக்கை, சட்டப்பூர்வ வாரிசு ஆவணங்கள், குற்றப்பத்திரிகையுடன் கூடிய நீதவான் நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் தேவையான ஏனைய ஆவணங்கள்.*
  - ***மூன்றாம் தரப்பினரின் நிரந்தர/தற்காலிக இயலாமை:*** *மருத்துவச் சான்றிதழ், காவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிகை (பொருந்தினால்), தொழில் வழங்குநரின் உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் தேவைப்படின் நீதவான் நீதிமன்றத் தீர்ப்பு உத்தரவு போன்ற ஆவணங்கள்.*
  - ***மூன்றாம் தரப்புச் சொத்து:*** *உரிமைகோருபவரிடமிருந்து கோரிக்கைக் கடிதம், குற்றப்பத்திரிகையுடன் கூடிய நீதவான் (Magistrate) நீதிமன்றத் தீர்ப்பு, சொத்து அல்லது வாகனச் சேதங்களுக்கான விரிவான மதிப்பீடுகள் மற்றும் சொத்து அல்லது வாகனத்தின் பதிவுச்சான்றிதழ் போன்றவை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

- *சிவில் நீதிமன்றங்களில் மூன்றாம் தரப்பினர் வழக்குத் தொடுத்திருந்தால், உங்களுக்கு அழைப்பாணை (Summons) அனுப்பப்பட்ட உடனேயே, அந்த அழைப்பாணை மற்றும் வழக்கின் நகல் ஆகியவற்றை எமக்கு அனுப்பி வைக்க வேண்டும்.*

### *ஒப்பந்ததாரரின் கடமைப் பொறுப்புக்கள்:*

- ***ஒப்பந்தம் பெறப்படும்போது:*** *அனைத்து முக்கிய உண்மைகளையும் துல்லியமாக வெளிப்படுத்துங்கள்.*
- ***ஒப்பந்தக் காலத்தின் போது:*** *ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இருந்தால் காப்புறு நிறுவனத்திற்கு தெரிவிக்கவும் மற்றும் தேவைப்படும்போது* ***மேலதிகக் கட்டுப்பணத்தைச்*** *செலுத்தவும்.*
- ***உரிமை கோரும் போது (Claiming):*** *கோரிக்கைக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்; தேவையான அனைத்து ஆவணங்களையும் விபரங்களையும் வழங்கவும். அனைத்து முக்கிய உண்மைகளையும் துல்லியமாக வெளிப்படுத்தவும்.*

### *முறைப்பாடு செய்யும் நடைமுறை:*

*எமது நிறுவனத்தின் உள்நாட்டுப் முறைப்பாடு கையாளுதல் நடைமுறையைப் பின்பற்ற, பின்வரும் முறைகள் மூலம் நீங்கள் புகார் அளிக்கலாம்:*

- ***தொலைபேசி மூலம்:*** *0112357357 என்ற அழைப்பு மைய (Call Center) இலக்கத்திற்கு அழைக்கவும்.*
- ***மின்னஞ்சல் மூலம்:*** *slic@srilankainsurance.com*
- ***தபால் மூலம்:*** *வாடிக்கையாளர் பராமரிப்பு அதிகாரி, SLICGL, 21, வோக்ஷால் வீதி, கொழும்பு 2.*
- ***நேரடியாக:*** *அருகிலுள்ள கிளைக்குச் செல்வதன் மூலம்.*

### *தகராறு தீர்வு:*

*வழங்கப்பட்ட முறைப்பாட்டுத் தீர்வு திருப்தி அளிக்கவில்லை என்றால், நீங்கள் இலங்கை காப்புறுதி குறைதீர்ப்பாளரைத் (Ombudsman) தொடர்பு கொள்ளலாம் அல்லது பின்வரும் இலக்கங்கள் ஊடாக இலங்கை* ***காப்புறுதி*** *ஒழுங்குமுறை ஆணையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.*

#### *காப்புறுதி குறைதீர்ப்பாளர்*

- ***முகவரி:*** *எண் 143A, வஜிர வீத, கொழும்பு 05, ஸ்ரீ லங்கா.*
- ***தொலைபேசி இலக்கம்:*** *+94 11 250 5542 / +94 11 250 5041*
- ***மின்னஞ்சல்:*** info@insuranceombudsman.lk

#### *இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு*

- ***முகவரி:*** *11 ஆம் மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 1.*
- ***தொலைபேசி இலக்கம்:*** *011 2396184 - 9 (பொது) | 011 2335167 (முறைப்பாடு)*
- ***மின்னஞ்சல்:*** info@ircsl.gov.lk
- ***நடுவர் தீர்ப்பு (Arbitration):*** *நடுவர் தீர்ப்பு முறையைப் பயன்படுத்தலாம். (மேலதிக விபரங்களுக்கு மோட்டார்* ***ஒப்பந்த*** *ஆவணத்தின் பக்கம் 12 இல் உள்ள நிபந்தனை 8 ஐப் பார்க்கவும்).*

### *சட்ட நடவடிக்கை:*

*மேற்கூறியவற்றில் ஏதேனும் ஒன்றிலிருந்து பெறப்பட்ட இறுதித் தீர்மானத்தில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால்,* ***காப்புறுதி நிறுவனத்தின்*** *தீர்மானத்திற்கு எதிராக நீங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.*

***முக்கிய குறிப்புகள்:***

- *இந்த ஆவணம் ஒரு சுருக்கத்தை மட்டுமே வழங்குகிறது, இது தனிப்பயனாக்கப்படவில்லை.* ***ஒப்பந்த*** *விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இந்த ஆவணத்தை விட மேலோங்கி நிற்கும்.*
- ***ஒப்பந்தம்*** *வெளியிடப்படும் போது பயனாளிகளைப் பரிந்துரைத்து, தேவைக்கேற்ப விபரங்களைப் புதுப்பிக்கவும்.*

***மேலதிக தகவலுக்கு:***

- *தொடர்புடைய கிளையைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும் அல்லது 0112357357 என்ற எண்ணிற்கும், slic@srilankainsurance.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் தொடர்பு கொள்ளவும்.*
- *நாடு முழுவதும் உள்ள எமது அலுவலகங்களுக்கு நேரில் வருகை தரவும்.*

***கவனத்திற் கொள்ள வேண்டியவை:***

- *எந்தவொரு மோசடியான கோரிக்கைகள் அல்லது செயல்களும் ஒப்பந்தத்தின் கீழ் உள்ள அனைத்துச் சலுகைகளையும் இழக்கச் செய்யும்.*
- *காப்புறுதிக் குறைப்பு அபராதங்களைத் தவிர்க்க, வாகனத்தை அதன் தற்போதைய சந்தை மதிப்பில் காப்புறுதி செய்வது உங்கள் பொறுப்பாகும்.*
- *ஒப்பந்தத்தின் கீழ் உள்ள அனைத்துக் கோரிக்கை கொடுப்பனவுகளும், ஒப்பந்தத்தின் பொருந்தக்கூடிய விதிமுறைகள், விதிவிலக்குகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.*

***முக்கியமான குறிப்பு:***

*இந்த IPID ஆவணமானது, அடிப்படை காப்புறுதி மற்றும் (பொருந்துமானால்) மேலதிகக் காப்புறுதிகளின் சுருக்கத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை மட்டுமே குறிப்பிடுகிறது மற்றும் உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்படவில்லை. முழுமையான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தகவல்கள், ஒப்பந்தத்திற்கு முந்தைய மற்றும் ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் விதிவிலக்குகள் உங்கள் ஒப்பந்த ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன. IPID ஆனது ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படமாட்டாது. எனவே, ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், காப்புறுதி ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளே செல்லுபடியாகும்.*